# 2 தெசலோனிக்கேயர் 1

## நவீன மொழிபெயர்ப்பாளர்களின் பகுதிப்பகுதியான பிரிவுகள்

| USB[4] | NKJV | NRSV | TEV | NJB |
|---|---|---|---|---|
| வணக்கம் | வாழ்த்துக்கள் | வணக்கம் | வாழ்த்துக்கள் | முகவுரை |
| 1:1-2 | 1:1-2 | 1:1-2 | 1:1<br>1:2 | 1:1-2 |
| கிறிஸ்துவின் வருகையில் நியாயத்தீர்ப்பு | தேவனின் இறுதி நியாயத்தீர்ப்பு மற்றும் மகிமை | நன்றி செலுத்தல் | கிறிஸ்துவின் வருகையில் நியாயத்தீர்ப்பு | நன்றி செலுத்தல் மற்றும் உட்சகப்படுத்தல் கடைசி நியாயத்தீர்ப்பு |
| 1:3-12 | 1:3-12 | 1:3-4 | 1:3-4 | 1:3-5 |
| | | தேவனின் நியாயத்தீர்ப்பு | | |
| | | 1:5-12 | 1:5-10 | |
| 5:16-22 | | | | 1:6-10 |
| | | | 1:11-12 | 1:11-12 |

**வாசிப்பு சுழற்சி** 3 (**<u>சிறந்த வேத வாசிப்புக்கான வழிகாட்டலிலிருந்து</u>**)

*பந்திபந்தியான பிரிவுகளின் அடிப்படையில் எழுத்தாளரின் உண்மையான நோக்கத்தை அறிதல்*

இது ஒரு கற்றல் வழிகாட்டல் விளக்கவுரை. அதாவது, வேதாகமத்திற்குரிய உங்களுடைய தனிப்பட்ட பொருள் விளக்கத்துக்கு நீங்களே பொறுப்பாளர்கள். நம்மோடிருக்கும் வெளிச்சத்தோடு நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாக நடக்க வேண்டியது அவசியம். நீங்களும், வேதாகமமும் பரிசுத்த ஆவியும் பொருள்விளக்கத்துக்கு இன்றியமையாதவர்கள். நீங்கள் இதனை விளக்கவுரையாளருக்கு விட்டுவிட முடியாது.

முழு அதிகாரத்தையும் ஒரே அமர்வில் வாசிக்கவும். விடய பிரிவுகளை இனங்கண்டுக்கொள்ளுங்கள். மேற்கூறப்பட்ட ஐந்து மொழிப்பெயர்ப்புக்களுடனும் உங்களுடைய விடய பிரிவுகளை ஒப்பிட்டுப்பாருங்கள். பகுதிப்பகுதியான பிரிவுகளானது வெளிப்பாடாயில்லாவிட்டாலும் மொழிப்பெயர்ப்பின் ஆதாரமாகிய எழுத்தாளருடைய நோக்கத்தினை புரிந்துக்கொண்டு பின்தொடருவதற்கான திறவுகோலாய் இருக்கிறது. ஒவ்வொரு பந்தியும் ஒரே ஒரு விடயத்திளை உள்ளடத்தியே காணப்படுகின்றது.

1. முதலாவது பந்தி
2. இரண்டாவது பந்தி
3. மூன்றாவது பந்தி
4. போன்றவை.

1-10 வசனங்களுக்கான சூழ்நிலை சார்ந்த நுண்ணறிவு

A. 1 தெசலோனிக்கேயரின் இறுதியியல் கருப்பொருள்களிலிருந்து 2 தெசலோனிக்கேயரை உருவாக்குகிறார்.

B. 2 தெச. 1: 3-10 என்பது கிரேக்க மொழியில் ஒரு வாக்கியமாகும். பவுலின் விசுவாசிகள் மீதான நம்பிக்கையையும், அவிசுவாசிகள் மீதான தேவனின் நியாயதீர்ப்பில் இருந்த உறுதியையும் அவர்கள் விவரிக்கிறார்கள். இது தேவனின் இறுதி நியாயத்தீர்ப்பின் மிக வலுவான பந்தியாகும். பூமிக்குரிய பாத்திரங்களான, ஆசீர்வதிக்கப்பட்ட மற்றும் சபிக்கப்பட்ட துன்புறுத்துபவரின் மற்றும் துன்புறுத்தப்பட்டவர்களின் நிலை தலைகீழாக மாற்றப்படும்.

C. 2 தெச. 1: 11-12 என்பது 3-10 வசனங்களின் சுருக்கமாகும்.

## சொல் மற்றும் சொற்றொடர் ஆய்வு

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 2 தெசலோனிக்கேயர் 1:1-2**

**1 பவுலும், சில்வானும், தீமோத்தேயும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது: 2 நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**

**1:1 "பவுல்"** தரிசு பட்டணத்தின் சவுல் முதலில் அப்போஸ்தலர் பணிகள் 13: 9 ல் பவுல் என்று அழைக்கப்படுகிறார். "புலம்பெயர்ந்தோரின்" பெரும்பாலான யூதர்களுக்கு எபிரேய பெயரும் கிரேக்க பெயரும் இருந்திருக்கலாம். அப்படியானால், சவுலின் பெற்றோர் அவருக்கு இந்த பெயரைக் வைத்தார்கள், ஆனால் ஏன் அப்போஸ்தலர் 13 ல் "பவுல்" என்று திடீரென்று தோன்றுகிறார்?
ஒருவேளை

1. மற்றவர்கள் அவரை இந்த புனைப்பெயரில் அழைக்க ஆரம்பித்தனர்
2. அவர் தன்னை "சிறிய" அல்லது "குறைந்தது" என்ற வார்த்தையால் குறிப்பிடத் தொடங்கினார்.

*Paulos பவுலோஸ்* என்ற கிரேக்க பெயர் "சிறியது" என்று பொருள்படும். அவரது கிரேக்க பெயரின் தோற்றம் குறித்து பல கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. இரண்டாம் நூற்றாண்டு பாரம்பரியம் படி பவுல் குறுகிய, கொழுத்த, வழுக்கையான, வளைந்த -கால் கொண்ட, தடித்த கண்-புருவம் மற்றும் நீண்ட கண்கள் கொண்டது என்பது பெயரின் சாத்தியமான ஆதாரமாகும், இது தெசலோனிக்கேய பட்டணத்திலிருந்து பெறப்பட்ட அதிகாரப்பூர்வ பட்டியலில் இல்லாத புத்தகமான பவுல் மற்றும் தெக்லாவிலிருந்து பெறப்பட்டது.
2. அப்போஸ்தலர் 9: 1-2-ல் உள்ளதைப் போலவே சபையையும் துன்புறுத்தியதால் பவுல் தன்னை "பரிசுத்தவான்களில் மிகக் குறைவானவர்" என்று அழைக்கும் பகுதிகளை (ஒ.பா. 1 கொரி. 15: 9; எபே 3: 8; 1 தீமோ. 1:15) காணலாம்.

சிலர் இந்த "குறைந்தது" எனும் பெயரை சுயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தோற்றமாக பார்த்திருக்கிறார்கள். இருப்பினும், கலாத்தியர் போன்ற ஒரு புத்தகத்தில், எருசலேமின் பன்னிரண்டு அப்போஸ்தலருடனான தனது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார், இது ஓரளவுக்கு சாத்தியமில்லை எனலாம். (ஒ.பா. 2 கொரி. 11: 5; 12:11; 15:10).

▣ **"சில்வான் " சீலா**

1. அவர் அப்போஸ்தலர் நடப்படிகளில் சிலா என்றும், நிருபங்களில் சில்வான் என்றும் அழைக்கப்படுகிறார்
2. 2 அவர், பர்னபாவைப் போலவே, எருசலேம் சபையில் ஒரு தலைவராக இருந்தார் (ஒ.பா. அப்போஸ்தலர் 15: 22-23)
3. அவர் பவுலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் (ஒ.பா. அப்போஸ்தலர் 15:40; 16: 19 எஃப்; 17: 1-15; 1 தெச. 1: 1)
4. பர்னபாவையும் பவுலையும் போலவே அவர் ஒரு தீர்க்கதரிசி (ஒ.பா. அப்போஸ்தலர் 15:32)
5. அவர் ஒரு அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுகிறார் (ஒ.பா. 1 தெச. 2: 6)
6. பவுலைப் போலவே அவரும் ரோம குடிமகனாக இருந்தார் (ஒ.பா. அப்போஸ்தலர் 16: 37-38)
7. யோவான் மாற்கைப் போலவே அவரும் பேதுருவுடன் தொடர்புடையவர், ஒரு எழுத்தாளராக கூட இருந்திருக்கலாம் (ஒ.பா. 1 பேது. 5:12)

▣ **"தீமோத்தேயு"**

1. அவருடைய பெயரின் அர்த்தம் "தேவனை கனம்பண்ணுகிறவர்" என்று பொருள்ப்படும்.
2. அவர் ஒரு யூத தாய் மற்றும் ஒரு கிரேக்க தந்தையின் பிள்ளையாக இருந்தார், அவர் லிஸ்திராவில் வாழ்ந்தார் (ஒ.பா. அப்போஸ்தலர் 16: 1). ஓரிகனின் ரோமர் 16:21ன் விளக்கவுரையின் லத்தீன் மொழிபெயர்ப்பில் தீமோத்தேயு தெர்பையின் குடிமகன் என்று கூறுகிறார். இது அப்போஸ்தலர் 20: 4 ல் இருந்து எடுக்கப்படலாம்.
3. யூத நம்பிக்கையில் அவருடைய தாயும் பாட்டியும் அவருக்கு வழிகாட்டியாக இருந்தனர் (ஒ.பா.  2 தீமோ. 1: 5; 3: 14-15).
4. பவுலின் முதல் மிஷனரி பயணத்தின் போது அவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார் (ஒ.பா. அப்போஸ்தலர் 13: 49-14: 25).
5. இரண்டாவது பயணத்தில் பவுல் மற்றும் சிலாவுடன்  மிஷனரி அணியில் சேரும்படி அவரிடம் கேட்கப்பட்டது (ஒ.பா. அப்போஸ்தலர் 16: 1-5). அவர் தீர்க்கதரிசனத்தால் உறுதிப்படுத்தப்பட்டார் (ஒ.பா.1 தீமோ. 1:18; 4:14)
6. 6. யூதர்களுடனும் கிரேக்கர்களுடனும் ஊழியம் செய்வதற்காக அவர் பவுலால் விருத்தசேதனம் செய்யப்பட்டார் (ஒ.பா. அப்போஸ்தலர் 16: 3).
7. அவர் பவுலின் அர்ப்பணிப்பு நிறைந்த தோழர் மற்றும் சக பணியாளராக எண்ணப்பட்டார். பவுலின் மற்றைய உதவியாளர்களை விட அவர் பெயரால் குறிப்பிடப்படுகிறார். (10 நிரூபங்களில் 17 முறை, ஒ.பா. ரோமர் 16:21; 1 கொரி. 4:17; 16:10; பிலி. 1: 1; 2: 19,22; கொலோ. 1: 5; 1 தெச. 1: 1; 2: 6; 3: 2; 1 தீமோ. 1: 2.18; 4:14; 2 தீமோ. 1: 2; 3: 14-15).
8. 8. பவுல் அவரை "விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயு" என்று அன்பாக அழைக்கிறார் (ஒ.பா.  1 தீமோ. 1: 2), "என் பிரியமுள்ள குமாரன்" (ஒ.பா.2 தீமோ. 1: 2),"பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரன்" (ஒ.பா. தீத்து 1: 4).
9. 9. பவுல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட போது அவர் ரோமில் இருந்தார், அத்துடன் அவருடன் நான்காவது மிஷனரி பயணத்தில் இணைந்துக் கொண்டார். (ஒ.பா. கொலோ. 1: 1; பிலேமோன் 1).
10. அவர் ஒரு "அப்போஸ்தலன்" என்று அழைக்கப்படுகிறார் (ஒ.பா. 1 தெச. 2: 6).
11. மூன்று போதக நிருபங்களில் இரண்டு இவருக்கு எழுத்தப்பட்டன.
12. அவர் கடைசியாக எபி. 13:23ல் குறிப்பிடப்பட்டுள்ளார்.

▣ **"சபை "** எக்லெசியா என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "அழைக்கப்பட்டவர்கள்". ஆகும். கிரேக்க நகரங்களில் நகரக் கூட்டங்கள் நடாத்துவதற்கு பயன்படுத்தப்படும் அதே சொல் ஆகும் (ஒ.பா. அப்போஸ்தலர் 19:32). இது செப்டுவஜின்ட்டில் qahal கஹால் (BDB 874, அதாவது, யாத்திராகமம் 12: 6; லேவி. 16:17; எண் 20: 4; உபா. 31:30) அல்லது இஸ்ரேலின் "சபை" என்று மொழிபெயர்க்க பயன்படுத்தப்பட்டது. ஆரம்பகால கிறிஸ்தவர்கள் தங்களை பழைய ஏற்பாட்டு இஸ்ரேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றம் மற்றும் விரிவாக்கமாகக் கருதினர். சிறப்பு தலைப்பைக் காண்க. கலா. 1: 2.

▣ **"பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் "** இந்த வாக்கியம் 1 தெச 1: 1 மற்றும் 2 தெச 1: 1 இல் உள்ள அறிமுகத்திற்கு இடையிலான சில வேறுபாடுகளில் ஒன்றாகும். விசுவாசிகள் தேவனை "எங்கள் பிதா" என்று அழைக்கலாம் (ஒ.பா. மத் 6: 9). நிச்சயமாக, உடல் ரீதியாக சந்ததியாகவும் அல்லது காலவரிசை அர்த்தத்திலும் தேவன் நம் தந்தை அல்ல, ஆனால் ஒரு குடும்ப உறவின் பொருளில் தந்தை எனலாம். கலா 1: 1 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பிதாவையும் குமாரனையும் இணைத்த வழிகளில் இலக்கண அமைப்பு ("பிதா" மற்றும் "ஆண்டவர் " என்ற இரண்டு பொருள்களைக் கொண்ட ஒரு (முன்னிலைச் சொல்) ஒன்றாகும் (ஒ.பா. 1 தெச. 1: 1). இந்த அமைப்பு அவர்களின் சமத்துவத்தையும் அதன் மூலம் இயேசுவின் தெய்வீகத் தன்மையையும் உறுதிப்படுத்துகின்றது.

பவுலுக்கு விசுவாசிகளை அடையாளப்படுத்த பிடித்த வழி "கிறிஸ்துவிற்குள்" இருக்கிறார்கள் என்பதாகும், ஆனால் விசுவாசிகளும் பிதாவில் இருக்கிறார்கள் என்று இங்கே அவர் வலியுறுத்துகிறார்.

**1:2 "கிருபையும் சமாதானமும் உண்டாவதாக"** பலர் இதைக் கிரேக்க மற்றும் யூத வாழ்த்துக்களின் கலவையாகப் பார்க்கிறார்கள். மீண்டும் மீண்டும் இச்சொற்றொடர் "எங்கள் பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும்" என பிதாவையும் குமாரனையும் இணைப்புச் சொல் "மற்றும்" அத்தோடு ஒற்றை முன்னிலைச் சொல்லால் இணைப்பதற்கு பயப்படுத்துவது, பவுலின் இறையியலில் உள்ள இயேசுவின் தெய்வீகத் தன்மையைக் காட்டுகிறது. (2 தெச. 1: 1 போல). இறையியல் கிருபை எப்போதும் சமாதானத்திற்கு வழிவகுக்கும்.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 2 தெசலோனிக்கேயர் 1:3-12**

**[3].சகோதரரே, நாங்கள் எப்போதும் உங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்; உங்கள் விசுவாசம் மிகவும் விரிவடைகிறதாலும், நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும், அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது. [4]. நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக்குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மைபாராட்டுகிறோம். [5]. நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் தகுதியுள்ளவராக கருதப்படும்படிக்கு, தேவன் நியாயமான தீர்ப்புச்செய்கிறவரென்பதற்கு, அதுவே தெளிவான அறிகுறியாகும். [6]. உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக்கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே. [7]. தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, [8]. கர்த்தராகிய இயேசு தமது**

**வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். [9]. அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, [10]. அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். [11]. ஆகையால், நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படும்பொருட்டாக; [12]. நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்.**

**1: 3 "நாங்கள் எப்போதும் உங்களுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும்"** பவுலின் சபைகளுக்கான ஜெப வாழ்க்கையை இது பிரதிபலிக்கிறது (ஒ.பா. வச. 11; 1 தெச. 1: 2; 2 தெச. 2:13 மற்றும் பிலி. 1: 3-4; 2 கொரி. 11:28). பவுல் எப்பொழுதும் நன்றியுடன் ஜெபிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தார் (ஒ.பா. 1 தெச. 5:18). சிறப்புத் தலைப்பைக் காண்க: 1 தெச 1: 2 இல் நன்றிசெலுத்தல்.

**NASB "ஏனென்றால் உங்கள் விசுவாசம் பெரிதும் விரிவடைகிறதாலும்"**
**NKJV "ஏனென்றால் உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும்"**
**NRSV "ஏனென்றால் உங்கள் விசுவாசம் ஏராளமாக பெருகுகின்றது"**
**TEV "ஏனென்றால் உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகின்றது"**
**NJB "ஏனென்றால் உங்கள் விசுவாசம் மிகவும் அற்புதமாக பெருகுகின்றது"**

இந்த உருவகம் தீவிரமான தாவர வளர்ச்சியை வெளிப்படுத்தும் ஒரு விவசாயம் சம்பந்தமான வசனமாகும். (ஒ.பா. 2 கொரி. 10:15; 2 பேதுரு 3:18). சிறப்பு தலைப்பைக் காண்க: பவுல் கலா. 1:13 இல் ஹூப்பர் கலவைகளைப் பயன்படுத்துகிறார். அவர்களின் நம்பிக்கை மற்றும் அன்பின் வளர்ச்சியை பவுல் பாராட்டினார். இது 1 தெச. 1: 3க்கு ஒத்ததாகும். ஆனால் குறிப்பாக “நம்பிக்கை" இல்லை. இந்த பகுதியில் இன்னும் நிறைய குழப்பங்கள் இருந்தன (அதாவது, இரண்டாவது வருகை, கலா 5: 5 இல் சிறப்பு தலைப்பைக் காண்க).

▣ **" நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு"** சபைக்குள் உள்ள உள்ளக ஐக்கியத்தின் சிக்கல்களின் வெளிச்சத்தில் (ஓ.பா. 1 தெச. 3:12; 5: 12-13; 1 யோவான் 4: 7,11,12,31), ஒருவருக்கொருவர் தங்கள் அன்பை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும்.

▣ **" அதிகரிக்கிறபடியினாலும் "** இந்த விளக்கம் வெள்ளம் அடித்துக் கொண்டு போகும் படங்களை நினைவிற்கு கொண்டுவரும் உருவகமாக பயன்படுத்தப்பட்டது.

**1: 4 "நாங்கள் உங்களைப் பற்றி மேன்மைபாராட்டுகிறோம் "** இந்த சொற்றொடரின் முக்கியத்துவம் "நீங்கள்" என்பதற்கு மாறாக "நாங்கள்" என்பதாகும். சபையே பலவீனமாக உணர்ந்தது (ஒ.பா. 1 தெச. 5:14). பவுல் அவர்களின் பலங்களைக் கண்டார், தெளிவாக தெரிவித்தார். துன்புறுத்தலின் கீழ் அவர்கள் கிறிஸ்துவின் சாயலை

வெளிப்படுத்தியமை பவுலின் பயனுள்ள ஊழியத்திற்கும் அதன் மூலம் அவருடைய அப்போஸ்தலதத்துவத்திற்கும் சான்றாகும் (ஒ.பா.  1 தெச. 2:19).

**NASB "விடாமுயற்சி"**
**NKJV "பொறுமை"**
**NRSV "உறுதியான தன்மை"**
**TEV "நீங்கள் தொடர்ந்து சகித்துக்கொள்வது பற்றி"**
**NJB "நிலையான"**

இது சொல்லார்தமாக "மனமுகர்ந்து, சுறுசுறுப்பான, உறுதியான சகிப்புத்தன்மை" (ஒ.பா. 1 தெச. 1: 3) என கொண்டுள்ளது. இது மக்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் தொடர்புடையது. இது அவர்களின் வாழ்க்கையில் ஆவியின் கிரியைக்கு மற்றொரு சான்றாகும். சிறப்பு தலைப்பு: கலா 5: 4 இல் விடாமுயற்சி (PERSEVERANCE).

▣ **"விசுவாசம்"** பழைய ஏற்பாட்டில் உள்ள இந்த சொல் தேவனின் நம்பகத்தன்மை மற்றும் நம்பிக்கையில் மனிதகுலத்தின் பிரதிபலிப்பு ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்டது (ஒ.பா.  ஆப. 2: 4, கலா 3: 4 இல் சிறப்பு தலைப்பைக் காண்க). துன்புறுத்தல்களுக்கு மத்தியில் அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தமையை காண்பிக்க இது பயன்படுத்தப்படுகிறது. விசுவாசத்தின் மூலம் தேவனின் உண்மைதத்துவம் விசுவாசியின் உண்மைதத்துவமாக மாறுகிறது. கலா 3: 6 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

▣ **"நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் மத்தியில்"** வீழ்ச்சியடைந்த உலகில் விசுவாசிகளுக்கு துன்பப்படுத்தப்படல் சாதாரணமானதாகும் (ஒ.பா. மத் 5: 10-12; அப்போஸ்தலர் 14:22; ரோமர் 8: 17-18; 1 தெச. 2:14; 3: 3; யாக்கோபு 1: 2-4; 1 பேது. 4: 12-16). இது பெரும்பாலும் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் வழிமுறையாகும் (ஒ.பா. எபி. 5: 8). சிறப்பு தலைப்புகளைக் காண்க: 1 தெச 1: 10-ல் உபத்திரவம், 1 தெச 3: 3 -ல் கிறிஸ்தவர்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்?

**1: 5 "தேவன் நியாயமான தீர்ப்புச்செய்கிறவரென்பதற்கு, அதுவே தெளிவான அறிகுறியாகும்"** இது தம் மக்களைத் துன்புறுத்துகிற அவிசுவாசிகளின் மீது ஊற்றப்பட்ட தேவனின் கோபத்தைக் குறிக்கிறது (ஒ.பா. பிலி. 1:28).

"நீதிமான்கள்" பற்றிய ஒரு சொல் ஆய்வுக்கு கலா 2:21 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

**NASB "எனவே நீங்கள் தகுதியுள்ளவராக கருதப்படும்படிக்கு"**
**NKJV "நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு"**
**NRSV "உங்களை தகுதியுள்ளவர்களாக மாற்றும் நோக்கம் கொண்டம்படிக்கு"**
**TEV "ஏனென்றால் இவற்றின் விளைவாக நீங்கள் தகுதியானவர்களாகிவிடுவீர்கள்"**
**NJB "நீங்கள் தகுதியுள்ளவராகக் காணப்படலாம்"**

இது ஒரு இறந்தகால செயற்பாட்டு வினையெச்சம் ஆகும், "தகுதியானதாக அறிவிக்கப்பட வேண்டும்." இச் செயற்பாட்டு வினை பிதாவாகிய தேவன் முகவர் என்பதைக் குறிக்கிறது. 1இது துன்பத்தின் ஒரு நோக்கமாகும். இது குணாதிசயத்தை உருவாக்குகிறது (ஒ.பா. 2 தெச. 1:11; ரோமர் 5: 3-4; எபி. 5: 8).

கிறிஸ்துவிற்குள் நீதிமான் எனும் ஒரு நிலைக்கும் விசுவாசிப்பவர்க்குள் நீதியை விருத்தி செய்தல் தேவைக்கும் இடையிலான இறையியல் வேறுபாட்டிற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தேவனுக்கு முன்பாக நாம் நிற்பது ஒரு கொடையாகும் (சாதாரணநிலை), ஆனால் ஒரு ஆணையுமாகும் (கட்டளை). ஒரு தடகள வீரனின் உருவகத்துடன் இந்த சத்தியத்தை வெளிப்படுத்துவது ஒரு வழியாக இருக்கலாம். விசுவாசிகள் கிறிஸ்துவுடனான விசுவாச உறவால் பந்தயத்தை வென்றுள்ளனர். இப்போது அவர்கள் அவருக்காக பந்தயத்தை விசுவாசத்தில், நன்றியுணர்வுடன், செயல்திறன் தேவையில்லை, கிறிஸ்தவரை தெய்வபக்திக்கு நடத்தும் விதமாக ஓட வேண்டும். (ஒ.பா. 1 தெச. 2:12; எபே 4: 1,17; 5: 2).

▣ **"தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம்"** சமநோக்கு சுவிசேஷங்களில் இது போன்ற ஒரு முக்கிய சொற்றொடர் உள்ளது (கலா 5:21 இல் சிறப்பு தலைப்பைக் காண்க). இயேசுவின் முதல் மற்றும் கடைசி பிரசங்கங்களும், அவருடைய உவமைகளில் பெரும்பாலானவைகளும் இந்த தலைப்பைக் கையாண்டன. இது இப்போது மனித இதயங்களில் தேவனின் ஆட்சியைக் குறிக்கிறது! யோவானின் நற்செய்தியில் இந்த சொற்றொடர் இரண்டு முறை மட்டுமே இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது (இயேசுவின் உவமைகளில் ஒருபோதும் இல்லை). யோவானின் சுவிசேஷத்தில் "நித்திய ஜீவன்" என்பது ஒரு முக்கிய சொல் மற்றும் உருவகமாகும்.

இந்த சொற்றொடர் இயேசுவின் போதனைகளின் இறுதியியல் (இறுதி நேரம்) உந்துதலுடன் தொடர்புடையது. இது "ஏற்கனவே, ஆனால் இன்னும் இல்லை" எனும் இறையியல் முரண்பாடு இரண்டு யுகங்களின் யூத கருத்தாக்கத்துடன் தொடர்புடையது, தற்போதைய தீமையான காலம் மற்றும் வரவிருக்கும் நீதியான காலம், இக் காலம் மேசியாவால் திறக்கப்படும். யூதர்கள் ஒரு ஆவியின் அதிகாரம் பெற்ற இராணுவத் தலைவரின் (பழைய ஏற்பாட்டில் உள்ள நியாதிபதிகளைப் போல) ஒரு வருகையை மட்டுமே எதிர்பார்க்கிறார்கள். இயேசுவின் இரண்டு வருகைகள் இரண்டு காலங்களையும் ஒன்றுடன் ஒன்று மேற்கொண்டன (சிறப்பு தலைப்பு: கலா 1: 4 இல் இரண்டு காலங்கள் பார்க்கவும்). மனித வரலாற்றில் தேவனுடைய ராஜ்யம் பெத்லகேமில் மனு அவதாரத்துடன் உடைந்துள்ளது. ஆயினும், இயேசு வெளிப்படுத்துதல் 19-ன் இராணுவ வெற்றியாளராக அல்ல, பாடுபடும் ஊழியக்காரனாக (ஒ.பா. ஏசாயா 53) மற்றும் தாழ்மையான தலைவராக (ஒ.பா. சக். 9: 9) வந்தார். ஆகையால், ராஜ்யம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது (ஒ.பா. மத் 3: 2; 4:17; 10: 7; 11:12; 12:28; மாற்கு 1:15; லூக்கா 9: 9,11; 11:20; 21: 31-32), ஆனால் முழுமையடைய வில்லை. (ஒ.பா. மத் 6:10; 16:28; 26:64).

**1: 6**

**NASB "எல்லாவற்றிற்கும் மேலாக இது மட்டுமே நீதியாயிருக்கிறது"**
**NKJV "நீதியாயிருக்கிறதே"**
**NRSV "இது உண்மையில் நீதியாயிருக்கிறது"**
**TEV "தேவன் சரியானதைச் செய்வார்:"**
**NJB "தேவன் மிகவும் நீதியாயிருப்பார்"**

இது ஒரு முதல் வகுப்பு நிபந்தனை வாக்கியமாகும், இது ஆசிரியரின் கண்ணோட்டத்தில் அல்லது அவரது இலக்கிய நோக்கங்களுக்காக உண்மை என்று கருதப்படுகிறது. தேவனின் தீர்ப்பு நியாயமானது.

▣ **"தேவனுக்கு பிரதிபலனாகக்கொடுப்பது"** இது ஒரு தார்மீக உலக ஒழுங்காகும். தேவன் விஷயங்களை சரியாக அமைப்பார் (கலா 6: 7-ல் முழு குறிப்பையும் காண்க).

**1: 7 "எங்களுக்கும் கூட "** பவுலும் கூட கஷ்டப்பட்டார் (ஒ.பா. 1 கொரி. 4: 9-13; 2 கொரி. 4: 8-12; 6: 4-10; 11: 24-27).

▣ **"கர்த்தராகிய இயேசு வெளிப்படும்போது"** சொல்லார்தமாக" கர்த்தராகிய இயேசுவின் வெளிப்பாட்டில்" வினை சொல் இல்லை. அபோகாலிப்சிஸ் என்றால் "தெளிவாக வெளிப்படுத்துவது" (ஒ.பா. 1 கொரி. 1: 7). இது இயேசுவின் இரண்டாவது வருகையைக் குறிக்கிறது. தேவனின் நீதியுள்ள நியாய தீர்ப்பின் காலம் (ஒ.பா. 2 தெச. 1: 5) இரண்டாவது வருகை / உயிர்த்தெழுதல் நாள் / நியாயத்தீர்ப்பு நாள் (ஒ.பா. மத். 25: 31-46; வெளி 20: 11-15). 1 தெச. 3:13 சிறப்பு தலைப்பைக் காண்க.

▣ **"தமது வல்லமையின் தூதரோடும்"** இது ஒரு பொதுவான வேதாகமாக் கருப்பொருள் ஆகும் (ஒ.பா. உபா. 33: 2; சகா. 14: 5; மத் 16:27; 25:31; மாற்கு 8:38; யூதா 14; வெளி 19:14). அவர் தம்முடைய பரிசுத்தவான்களுடன் வருவார் (ஒ.பா. 1 தெச. 4: 13-18). மத்தேயு 13:41 மற்றும் 24:31 தேவதூதர்கள் மனிதகுலத்தை ஒன்று திரட்டி மற்றும் பிரிப்பார்கள் என்பதைக் குறிக்கிறது (ஒ.பா. மத் 13: 39-41; 24:31).

▣ **"ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும்"** இது தேவனின் நியாயத்தீர்ப்பின் அடையாளமாகும் (ஒ.பா. ஏசா. 29: 6; 30: 27-30; 66: 14-15; தானி. 7: 9-10)/ இந்த சொற்றொடர் 2 தெச. 1: 7 அல்லது 8 டுடன் செல்கிறதா என்று குழப்பம் நிலவுகிறது. இது 2 தெச. 1: 7ல் இருந்தால். இது தேவதூதர்களுடன் தொடர்புடையது; அது 2 தெச. 1: ல் இருந்தால் இது நியாய தீர்ப்புடன் தொடர்புடையது. NKJV, NRSV மற்றும் REB மொழிபெயர்ப்புகள் இதை 2 தெச 1: 8ல் வைத்துள்ளன.

**SPECIAL TOPIC: FIRE (BDB 77, KB 92)**
**சிறப்பு தலைப்பு: நெருப்பு (BDB 77, KB 92)**

வேதாகமத்தில் நெருப்பு நேர்மறை மற்றும் எதிர்மறை அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

A. நேர்மறை
   1. வெப்பமடைய செய்கிறது (ஒ.பா. ஏசா. 44:15; யோவான் 18:18)
   2. வெளிச்சம் தருகிறது (ஒ.பா. ஏசா. 50:11; மத் 25: 1-13)
   3. சமைக்க (ஒ.பா. யாத்திராகமம் 12: 8; ஏசா. 44: 15-16; யோவான் 21: 9)
   4. சுத்திகரிக்கிறது (ஒ.பா. எண் 31: 22-23; நீதி. 17: 3; ஏசா. 1:25; 6: 6-8; எரே. 6:29; மல். 3: 2-3)
   5. தேவனின் பரிசுத்தம் (ஒ.பா. ஆதி. 15:17; யாத்திராகமம் 3: 2; 19:18; எசே. 1:27; எபி. 12:29)
   6. தேவனின் தலைமைதத்துவம் (ஒ.பா. யாத்திராகமம் 13:21; எண் 14:14; 1 கிலோ. 18:24)
   7. தேவனின்அதிகாரம் (ஒ.பா. அப்போஸ்தலர் 2: 3)

8. தேவனின் பாதுகாப்பு (ஒ.பா. சக். 2: 5)

B. எதிர்மறை
1. சுட்டெரிக்கிறது (ஒ.பா. யோசு. 6:24; 8: 8; 11:11; மத் 22: 7)
2. அழிக்கிறது (ஒ.பா. ஆதி. 19:24; லேவி. 10: 1-2)
3. கோபம் (ஒ.பா. எண் 21:28; ஏசா. 10:16; சக. 12: 6)
4. தண்டனை (ஒ.பா. ஆதி. 38:24; லேவி. 20:14; 21: 9; ஜோஷ். 7:15)
5. தவறான இறுதியியல் அறிகுறி (ஒ.பா. வெளி. 13:13)

C. பாவத்திற்கு எதிரான தேவனின் கோபம் பெரும்பாலும் நெருப்பு சார்ந்த உருவங்களில் வெளிப்படுகிறது
1. அவருடைய கோபம் சுட்டெரிக்கிறது (ஒ.பா. ஓசி. 8: 5; செப். 3: 8)
2. அவர் நெருப்பை ஊற்றுகிறார் (ஒ.பா.1: 6)
3. நித்திய அக்கினி (ஒ.பா. எரே. 15:14; 17: 4; மத் 25:41; யூதா வ. 7)
4. இறுதியியல் நியாயதீர்ப்பு (ஒ.பா. மத். 3:10; 5:22; 13:40; யோவான் 15: 6; 2 தெச. 1: 7; 2 பேதுரு 3: 7-10; வெளி 8: 7; 16: 8; 20: 14-15)

D. தீ பெரும்பாலும் தியோபனிகளில் - தேவன் தோன்றும் இடங்களில் பயன்படுகின்றது. **The NIDOTTE**, தொகுதி. 1, பக். 534, "நெருப்பு" உருவங்களைப் பயன்படுத்தி தேவன் தன்னை எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதையும், அவருடைய விருப்பத்தையும் ஒரு நல்ல பட்டியலைக் கொண்டுள்ளது.
1. தேவன் எரியும் அக்கினிஜுவாலையாக - ஆதி. 15:17
2. தேவன் எரியும் முட்செடியில் தோன்றினார் - யாத்திராகமம். 3: 2
3. நெருப்புத் தூண் - யாத்திராகமம். 13: 21.22; 14:24; எண். 9:15; 14:14; சங் 78:14; 105: 39
4. நெருப்பின் நடுவில் இருந்து வெளிப்பாடுகளைப் பேசினார் - உபா. 4: 12.15.33.36; 5: 4.22.24.26; 9:10; 10: 4
5. சீனாய் மலை - யாத்திராகமத்தில் அவரது வம்சாவளியுடன் இணைக்கப்பட்டுள்ளது. 19:18; 24:17
6. மின்னலில் - ஏசா. 29: 6; 30: 27.30; சங். 50: 3
7. நியாயதீர்ப்பின் சுத்திகரிக்கும் நெருப்பு
8. தனிப்பட்ட பிரசன்னம் நெருப்பில் வருகிறது - ஏசா. 66: 15-16

E. வேதாகமத்தில் உள்ள பல உருவங்களைப் போலவே (அதாவது, புளிப்பு, சிங்கம்) நெருப்பும் சூழலமைவைப் பொறுத்து ஒரு ஆசீர்வாதமாகவோ அல்லது சாபமாகவோ இருக்கலாம்.

Copyright © 2014 Bible Lessons International

**1: 8**
**NASB "பழிவாங்கலைக் கையாலும்படிக்கு"**
**NKJV "ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு"**
**NRSV "பழிவாங்கும் நடவடிக்கை"**
**TEV "தண்டிக்க"**

**NJB "அபராதம் விதிக்க**"

இது நிகழ்கால செய்வினையெச்சம் ஆகும். இது ஒரு உணர்ச்சிபூர்வமான, பழிவாங்கும் எதிர்வினை அல்ல, ஆனால் "அனைவருக்குமான சம்பூரண நீதியாகும்."தேவனின் படைப்பு தேவனின் தன்மையை பிரதிபலிக்கும்.

▣ **"தேவனை அறியாதவர்களுக்கும்"** இந்த வார்த்தை பாகாலை வழிபடுபவர்கள் வேண்டுமென்றே ஒளியை நிராகரிப்பதையும் (ஒ.பா. சங். 79: 6; எரே. 10:25; 1 தெச. 4: 5; யோவான் 3: 17-21; ரோம. 1: 18,25; 2: 14-15) மற்றும் விசுவாசிகள் தெசலோனிக்கேயாவில் துன்புறுத்தப்பட்டமையையும் பிரதிபலிக்கிறது. இந்த சொற்றொடர் தேவனைப் பற்றிய அறிவாற்றல் சார்ந்த உண்மையை மட்டுமல்ல ("அறிவார்" என்ற கிரேக்க கருத்து) மட்டுமல்லாமல், தேவனுடனான நெருக்கமான ஐக்கியம் ("அறிதல்" என்ற எபிரேய கருத்து). "அறிவது" என்ற சொல்லுக்கு நெருங்கிய அந்நியோன்னியம் எனும் எபிரேய அர்த்தம் உள்ளது (ஒ.பா. ஆதி 4: 1; எரே. 1: 5; மாற்கு 14:71; தீத்து 1:16).

**SPECIAL TOPIC: KNOW (using mostly Deuteronomy as a paradigm)**
**சிறப்பு தலைப்பு: அறிதல் (பெரும்பாலும் உபாகமத்தை ஒரு முன்னுதாரணமாகப் பயன்படுத்துதல்)**

"அறிதல் " (*யதா, yada,* BDB 393) என்ற எபிரேய வார்த்தை *Qal கல்லில்* பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

1. நன்மை தீமைகளைப் புரிந்து கொள்வது - ஆதி. 3:22; உபா. 1:39; ஏசா. 7: 14-15; யோனா 4:11
2. புரிந்துகொள்வதன் மூலம் தெரிந்து கொள்வது - உபா. 9: 2.3.6; 18:21
3. அனுபவத்தால் தெரிந்து கொள்வது - உபா. 3:19; 4:35; 8: 2.3.5; 11: 2; 20:20; 31:13; யோசு. 23:14
4. கருத்தில் கொள்வது - உபா. 4:39; 11: 2; 29:16
5. தனிப்பட்ட முறையில் தெரிந்து கொள்வது
   a. ஒரு நபர் - ஆதி. 29: 5; யாத்திராகமம். 1: 8; உபா. 22: 2; 33: 9
   b. ஒரு தேவன் - உபா. 11:28; 13: 2.6.13; 28:64; 29:26; 32:17
   c. யாவே YHWH - உபா. 4: 35,39; 7: 9; 29: 6; ஏசா. 1: 3; 56: 10-11
   d. பாலியல் - ஆதி. 4: 1,17,25; 24:16; 38:26
6. ஒரு கற்றல் திறன் அல்லது அறிவு - ஏசா. 29: 11.12; ஆமோஸ் 5:16
7. புத்திசாலித்தனமாக இருங்கள் - உபா. 29: 4; நீதி. 1: 2; 4: 1; ஏசா. 29:24
8. தேவனின் அறிவு
   a. மோசேயின் - உபா. 34:10
   b. இஸ்ரேலின் - உபா. 31:21

Copyright © 2013 Bible Lessons International

▣ **"சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும்"** சில வேதாகம விளக்கவியலாளர்கள் இது தெசலோனிய விசுவாசிகளைத் துன்புறுத்தும் இரண்டாவது

குழுவைக் குறிக்கிறது என்று நினைக்கிறார்கள்; முதல் சொற்றொடர் பாகல்களைக் குறிக்கும் ("தேவனை அறியாதவர்கள்") மற்றும் இரண்டாவது யூதர்களைக் குறிக்கும்.

**1: 9 "ஆக்கினையை"** இது 2 தெச. 1: 8-ல் உள்ள "பழிவாங்கும்" இற்கு பயன்படுத்தப்பட்ட அதே வேர் சொல்லாகும்.

▣ **"நித்திய அழிவு"** "நித்தியம்" (ஒ.பா. மத் 18: 8; 25:41; மாற்கு 3:29; எபி. 6: 2; யூதா 1: 7) அதே வேரை "காலம்" வுடன் பகிர்ந்து கொள்கிறது (ஒ.பா. மத் 28:20; எபி. 1: 2). மத். 25:46 இது பரலோகத்தையும் நரகத்தையும் விவரிக்கிறது (ஒ.பா. 1 தெச. 2:16). நிகழ் காலத்தில் (காலம்) நற்செய்திக்கு ஒரு நபரின் பதில் அவரது / அவளது எதிர்காலத்தை (வயது) முத்திரையிடுகிறது.

"அழிவு" (ஒலெத்ரோஸ்) என்ற சொல் 1 கொரி. 5: 5; 1 தெச. 5: 3; 1 தீமோ. 6:9 இங்கு காணப்படுகின்றது. இதன் பொருள் "வாழ்வதற்கு மதிப்புள்ள அனைத்தையும் இழத்தல்" (மோல்டன், மில்லிகன், பக். 445), ஆனால் நிர்மூலமாக்குதல் அல்ல (*exolethreuō,* உபா 18:19 இன் LXX).

**சிறப்பு தலைப்பு: நித்தியம் *(aiōnios)***
**SPECIAL TOPIC: ETERNAL *(aiōnios)***

ராபர்ட் பி. கிர்ட்ல்ஸ்டோன், தனது *பழைய ஏற்பாட்டின் ஒத்த சொற்கள் Synonyms of the Old Testament* என்ற புத்தகத்தில், "நித்தியம்" என்ற வார்த்தையைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான கருத்தைக் கொடுத்துள்ளார்:

"அய்னியோஸ் *(aiōnios*) என்ற வினையெச்சம் நித்திய ஜீவனைப் பொறுத்தவரை புதிய ஏற்பாட்டில் நாற்பது தடவைகளுக்கு மேல் பயன்படுத்தப்படுகிறது, இது ஓரளவிற்கு நிகழ்கால பரிசாக கருதப்படுகிறது, ஓரளவிற்கு எதிர்காலத்திற்கான வாக்குறுதியாகவும் கருதப்படுகிறது. இது ரோமர் 16.26 இல் தேவனின் அநாதி/முடிவற்ற இருப்புக்கும்; எபி. 9.12; 13.20ல் கிறிஸ்துவின் பாவ நிவாரண பலியின் அநாதி/முடிவற்ற செயல்திறனான கிரியையும்; மற்றும் ரோம. 16.25; 2 தீமோ. 1.9; தீத்து 1.2ல் உள்ள அநாதி காலங்களுக்கும் இது பயன்படுத்தப்படுகிறது

இந்த வார்த்தை நித்திய நெருப்பை, மத். 18.8; 25.41; யூதா 1: 7; நித்திய தண்டனையை, மத். 25.46; நித்திய நியாய தீர்ப்பு அல்லது குற்றப்படுத்தலை, மாற்கு 3.29; எபி. 6.2; நித்திய அழிவை, 2 தெச. 1: 9 ல் குறிக்கிறது. இந்த பந்திகளில் உள்ள சொல் இறுதியைக் குறிக்கிறது, இந்த தீர்ப்புகள் விதிக்கப்படும் போது, தகுதிபடுத்துவதற்காக கொடுக்கப்பட்ட காலம், மாற்றம் அல்லது ஒருவரின் நல்ல காலத்தை மீட்டெடுக்கும் வாய்ப்பு, முற்றிலும் என்றென்றும் கடந்து சென்றிருக்கும். எதிர்காலத்தைப் பற்றி அதாவது மனித வாழ்வின் மீதமுள்ள இருப்பைப் பற்றி மற்றும் அவநம்பிக்கையின் தார்மீக கணம் பற்றி, நித்தியத்தின் வெளிச்சத்தில் பார்க்கப்படுவது போல நாங்கள் மிகக் குறைவாகவே புரிந்துகொள்கிறோம், ஒருபுறம், தேவனுடைய வார்த்தையை கூட்டுவது தவறு என்றால், மறுபுறம் நாம் அதிலிருந்து வார்த்தைகளை விலக்கவும் கூடாது; வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நித்திய தண்டனை என்ற கோட்பாட்டின் கீழ் நாம் தடுமாறினால், கிறிஸ்துவில்

கடவுளின் அன்பின் நற்செய்திக்கு இணங்க, காத்திருக்க நாம் திருப்தியடைய வேண்டும், நாம் புரிந்து கொள்ள முடியாத இருண்ட பின்னணி இருப்பதை ஒப்புக்கொள்கையில் "(பக். 318-319). வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நித்திய தண்டனை என்ற கோட்பாட்டின் கீழ் நாம் தடுமாறினாலநாம் புரிந்து கொள்ள முடியாத இருண்ட பின்னணி இருப்பதை ஒப்புக்கொள்கையில், கிறிஸ்துவில் உள்ள தேவனின் அன்பின் நற்செய்திக்கு இணங்க, நாம் காத்திருந்து திருப்தியடைய வேண்டும், "(பக். 318-319).

Copyright © 2014 Bible Lessons International

▣ **"கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து நீங்கலாகி"** இது நரகத்தின் மோசமான அம்சமாகும். சங் 139: 8-ன் கே.ஜே. வி-யில் "நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்" என்று கூறுகிறது, ஆனால் சங்கீதத்தில் இது ஷியோல் அல்லது ஹேடீஸைக் குறிக்கிறது (இறந்தவர்களின் இருப்பிடம், ஒ.பா. மத். 11:23; 16:18; லூக்கா 10:15; 16:23; வெளி. 1:18; 20: 13,14), கெஹென்னா அல்ல, இது தேவனிடமிருந்து நிரந்தரப் பிரிக்கும் இடம் (ஒ.பா. மத் 5: 22,29,30; 10:28; 18: 9; 23: 15,33; மாற்கு 9: 43,45,47; லூக்கா 12: 5).

**SPECIAL TOPIC: THE DEAD, WHERE ARE THEY? (SHEOL/HADES, GEHENNA, TARTARUS)**
**சிறப்பு தலைப்பு: இறந்தவர், அவர்கள் எங்கே? (ஷியோல் / ஹேடஸ், கெஹென்னா, டார்டாரஸ்)**

I பழைய ஏற்பாடு

A. எல்லா மனிதர்களும் பாதாளத்துக்குச் செல்கிறார்கள் (மூலக்கூற்று வேர்சொல் இல்லை மற்றும் சொற்பிறப்பியல் நிச்சயமற்றது, BDB 982, KB 1368), இது இறந்தவர்கள் வசிக்கும் இடம் அல்லது கல்லறை ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு வழியாகும், என பெரும்பாலும் ஞான இலக்கியம் மற்றும் ஏசாயாவில் குறிப்பிடப்படுகின்றது. பழைய ஏற்பாட்டில் இது ஒரு நிழலான, நனவான, ஆனால் மகிழ்ச்சியற்ற வாழ்வு ஆகும் (ஒ.பா. யோபு 10: 21-22; 38:17).

B. ஷியோல்/ பாதாளம் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
1.தேவனின் நியாயத்தீர்ப்புடன் தொடர்புடையது (தீ), உபா. 32:22
2.சிறை வாயில்கள், யோபு 38:17; சங். 9:13; 107: 18
3.திரும்ப முடியாத இடம், யோபு 7: 9 (மரணத்திற்கான அக்காடியன் தலைப்பு)
4.இருளின் நிலம் / சாம்ராஜ்யம், யோபு 10: 21-22; 17:13; 18:18
5.அமைதியான இடம் சங். 28: 1; 31:17; 94:17; 115: 17; ஏசா. 47: 5
6.நியாயதீர்ப்பு நாளுக்கு முன்பான தண்டனையுடன் தொடர்புடையது, சங். 18: 4-5
7.அழிவு என்பதோடு தொடர்புடையது (அழிவு; சிறப்புத் தலைப்பைக் காண்க: அபாடன். அபோலியன்), இதில் தேவனும் இருக்கிறார், யோபு 26: 6; சங். 139: 8; ஆமோஸ் 9: 2

8."குழி" என்பதோடு தொடர்புடையது (கல்லறை), சங்.16: 10; 88: 3; ஏசா. 14:15; எசெக். 31: 15-17
9.துன்மார்க்கன் பாதாளத்தில் உயிரோடு இறங்குவார்கள், எண். 16: 30,33; யோபு 7: 9; சங். 55:15
10.ஒரு பெரிய வாயைக் கொண்ட விலங்காக அடிக்கடி உருவகப்படுத்தப்படுகிறது, எண் 16:30; நீதி.1:12; ஏசா. 5:14; ஆப. 2: 5
11.அங்குள்ள மக்கள் ரெபாயிம் என அழைக்கப்படுவர் (அதாவது, "இறந்தவர்களின் ஆவிகள்"), யோபு 26: 5; நீதி. 2:18; 21:16; 26:14 ஏசா. 14: 9-11)
12.இருப்பினும், YHWH இங்கே கூட இருக்கிறார், யோபு 26: 6; சங். 139: 8; நீதி.15:11

II புதிய ஏற்பாடு

A. எபிரேய ஷியோலை பாதாளத்தை கிரேக்க ஹேட்ஸ் (காணாத உலகம்) எனும் பதத்தால் மொழிபெயர்க்கப்படுகின்றது.

B. *ஹேட்ஸ்* வகைப்படுத்தப்படுகின்றது (ஷியோலைப் போன்றது)
1.மரணத்தைக் குறிக்கிறது, மத். 16:18
2.மரணத்துடன் தொடர்புடையது, வெளி. 1:18; 6: 8; 20: 13-14
3.நிரந்தர தண்டனை (கெஹென்னா), மத். 11:23 பழைய ஏற்பாடு மேற்கோள்); லூக்கா 10:15; 16: 23-24
4.பெரும்பாலும் கல்லறைக்கு ஒப்பானது, லூக்கா 16:23

C. பிரிக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு (ரபீஸ்)
1.நீதிமான்களின் பகுதி பரதீஸ் என்று அழைக்கப்படும் (உண்மையில் பரலோகத்தின் மற்றொரு பெயராகும், ஒ.பா. 2 கொரி. 12: 4; வெளி. 2: 7), லூக்கா 23:43
2.துன்மார்க்கரின் பகுதி நரகம் (டார்டாரஸ்) என்று அழைக்கப்படும் , 2 பேதுரு 2: 4, இது தீய தூதர்களுக்கான இடமாகும் (ஒ.பா. ஆதியாகமம் 6; 1 ஏனோக்). இது "பாதாளத்துடன்" தொடர்புடையது, லூக்கா 8:31; ரோம். 10: 7; வெளி 9: 1-2,11; 11: 7; 17:18; 20: 1,3

D. கெஹென்னா (எரிநரகம்)
1.இது பழைய ஏற்பாட்டு சொற்றொடரை பிரதிபலிக்கிறது, "இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கு" (எருசலேமின் தெற்கே). ஃபீனீசிய அக்கினி கடவுளான மோளேகுக்கு (BDB 574, KB 591) குழந்தையை பலிகொடுத்து வணங்கப்பட்ட இடம் அது (ஒ.பா. 2 இராஜா. 16: 3; 21: 6; 2 நாளா. 28: 3; 33: 6), இது லேவி. 18:21; 20: 2-5ல் தடைசெய்யப்பட்டது.
2.எரேமியா அதை பாகால் வழிபாட்டு இடத்திலிருந்து YHWH இன் தீர்ப்பின் தளமாக மாற்றினார் (ஒ.பா. எரே. 7:32; 19: 6-7). I ஏனோக் 90: 26-27 மற்றும் சிப் 1:103, ஆகியவற்றில் இது அக்கினிமயமான, நித்திய தீர்ப்பின் இடமாக மாறியது. 1: 103.
3.இயேசுவின் நாளின் யூதர்கள் தங்கள் முன்னோர்கள் குழந்தை தியாகத்தால் புறமத வழிபாட்டில் பங்கேற்றதைக் கண்டு திகைத்துப்போனார்கள், அவர்கள் இந்த பகுதியை எருசலேமுக்கான குப்பைக் கிடங்காக மாற்றினர். நித்திய தீர்ப்புக்கான இயேசுவின் பல உருவகங்கள் இந்த நிலப்பரப்பில் இருந்து வந்தன (நெருப்பு, புகை, புழுக்கள், துர்நாற்றம், ஒ.பா. மாற்கு 9: 44,46). கெஹென்னா என்ற சொல்

இயேசுவால் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது (யாக்கோபு 3: 6 தவிர).

4.இயேசு எரிநரகம் எனும் பதத்தைப் (கெஹென்னா) பயன்படுத்தியமை

a.அக்கினி, மத். 5:22; 18: 9; மாற்கு 9:43

b.நித்தியமான, மாற்கு 9:48 (மத் 25:46)

c.அழிவின் இடம் (ஆத்துமா மற்றும் சரீரம் இரண்டும்), மத். 10:28

d.பாதாளத்திற்கு (ஷியோல்) இணையாக, மத். 5: 29-30; 18: 9

e.பொல்லாதவர்களை "நரகத்தின் மகன்" என்று வகைப்படுத்துகிறார். மத். 23:15

f.நீதி ரீதியான தண்டனையின் விளைவாக, மத். 23:33; லூக்கா 12: 5

g.இரண்டாவது மரணத்திற்கு இணையாக நரகத்தின் எண்ணக்கரு (ஒ.பா. வெளி. 2:11; 20: 6,14) அல்லது அக்கினிக்கடல் காணப்படுகின்றது (ஒ.பா. மத் 13: 42,50; வெளி. 19:20; 20:10, 14-15; 21: 8). நெருப்பு ஏரி மனிதர்களின் (பாதாளத்தில் / ஷியோலில் இருந்து) மற்றும் தீய தூதர்களின் (நரகத்திலிருந்து (டார்டாரஸ்), 2 பேதுரு 2: 4; யூதா 1: 6 அல்லது பாதாளத்தில் (அபிஸ்) இருந்து, ஒ.பா. லூக்கா 8:31; வெளி 9: 1-11; 20: 1,3) இடமாக மாறும் சத்தியம் உள்ளது.

h.இது மனிதர்களுக்காக வடிவமைக்கப்படவில்லை, ஆனால் சாத்தானுக்கும் அவருடைய தூதர்களுக்கும் உருவாக்கப்பட்டுள்ளது, மத். 25:41

E. ஷியோல் (பாதாளம்- எபிரேயம்), ஹேட்ஸ் (பாதாளம்- கிரேக்கம்) மற்றும் கெஹென்னா (நரகம்) ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு இருப்பதால் பின்வருவன சாத்தியமாகும்

1.ஆரம்பத்தில் எல்லா மனிதர்களும் ஷியோல் / ஹேட்ஸுக்குச் சென்றனர்

2.நியாயதீர்ப்பு நாளுக்குப் பிறகு அவர்களின் அனுபவம் (நல்லது / கெட்டது) அதிகரிக்கிறது, ஆனால் துன்மார்க்கரின் இடம் அப்படியே உள்ளது (இதனால்தான் கே.ஜே. வி ஹேட்ஸ் (கல்லறை) எனவும் கெஹென்னா (நரகம்) என்றும் மொழிபெயர்த்தது.

3.நியாயதீர்ப்புக்கு முன் வேதனையைக் குறிப்பிடும் ஒரே ஒரு புதிய ஏற்பாட்டின் பகுதி லூக்கா 16: 19-31 (லாசரஸ் மற்றும் பணக்காரர்) உவமை ஆகும். இப்போது இங்கு ஷியோல் தண்டனைக்குரிய இடமாகவும் விவரிக்கப்படுகிறது (ஒ.பா. உபா. 32:22; சங். 18: 1-5). இருப்பினும், ஒரு உவமையில் ஒரு கோட்பாட்டை நிறுவ முடியாது.

III இறப்புக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையிலான இடைநிலை

A. "ஆத்துமாவின் அழியாத தன்மையை" புதிய ஏற்பாடு கற்பிக்கவில்லை, இது இறப்பிற்கு பின்னான வாழ்க்கையின் பல பண்டையகால கண்ணோட்டங்களில் ஒன்றாகும், இது அதை உறுதிப்படுத்துகிறது

1.மனித ஆத்துமாக்கள் அவர்களின் உடல் வாழ்க்கைக்கு முன்பே உள்ளன

2.மனித ஆத்துமாக்கள் உடல் மரணத்திற்கு முன்னும் பின்னும் நித்தியமானவை

3.பெரும்பாலும் உடல் ஒரு சிறை மற்றும் மரணமாக இருக்கிறது. எனவே முன்பே இருக்கும் நிலைக்கு விடுவிக்கப்படுகிறது

B. புதிய ஏற்பாடு இறப்புக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் ஒரு உடலை விட்டு ஆத்துமா பிரிந்திருக்கும் நிலையை சாடையாக குறிப்பிடுகின்றது.

1.உடலுக்கும் ஆத்துமாவுக்கும் இடையிலான பிளவு பற்றி இயேசு பேசுகிறார், மத். 10:28
2.ஆபிரகாமுக்கு ஏற்கனவே ஒரு உடல் இருக்கலாம், மாற்கு 12: 26-27; லூக்கா 16:23
3.மோசேயும் எலியாவும் மத்தேயு 17ல் மறுரூபமாக்கப்பட்ட வேளையில் ஒரு பௌதீக உடலைக் கொண்டிருந்தனர்

IV பரலோகம்

A. இந்த சொல் வேதாகமத்தில் மூன்று உணர்வுகளில் பயன்படுத்தப்படுகிறது.
1.பூமிக்கு மேலே உள்ள வளிமண்டலம், ஆதி 1: 1,8; எசா. 42: 5; 45:18
2.விண்மீன்கள் நிறைந்த வானம், ஆதி. 1:14; உப. 10:14; சங். 148: 4; எபி. 4:14; 7:26
3.தேவனின் சிம்மாசனத்தின் இடம், உபா. 10:14; 1 இரா. 8:27; சங். 148: 4; எபே. 4:10; எபி. 9:24 (மூன்றாவது பரலோகம், 2 கொரி. 12: 2)

B. விழுந்த மனிதர்களுக்கு புரிந்துகொள்வதற்கான வழி அல்லது திறமை இல்லாததால், மரணத்திற்கு பின்னான வாழ்க்கையைப் பற்றி பைபிள் அதிகம் வெளிப்படுத்தவில்லை (ஒ.பா. 1 கொரி. 2: 9).

C. பரலோகம் ஒரு இடம் (ஒ.பா. யோவான் 14: 2-3) மற்றும் ஒரு நபர் (ஒ.பா. 2 கொரி. 5: 6,8). பரலோகம் மீட்டெடுக்கப்பட்ட ஏதேன் தோட்டமாக இருக்கலாம் (ஆதியாகமம் 1-2; வெளிப்படுத்துதல் 21-22). பூமி சுத்திகரிக்கப்பட்டு மீட்கப்படும் (ஒ.பா. அப்போஸ்தலர் 3:21; ரோமர் 8:21; 2 பேதுரு 3:10). தேவனின் சாயல் (ஆதி. 1: 26-27) கிறிஸ்துவில் மீட்டெடுக்கப்படுகிறது. இப்போது ஏதேன் தோட்டத்தின் நெருக்கமான ஐக்கியம் மீண்டும் சாத்தியமாகும்.

இருப்பினும், இது உருவகமாக இருக்கலாம் (பரலோகம் ஒரு பெரிய, கனசதுரமான நகரமாக வெளி. 21: 9-27) மற்றும் உண்மையில் இல்லை. 1 கொரிந்தியர் 15 உடல் மற்றும் ஆவிக்குரிய சரீரத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை பெரிய விருட்சத்தின் விதை என்று விவரிக்கிறது. மீண்டும், 1 கொ. 2: 9 (ஏசா. 64: 4 மற்றும் 65:17 இலிருந்து ஒரு மேற்கோள்) ஒரு பெரிய வாக்குறுதியும் நம்பிக்கையுமாக குறிப்பிடப்பட்டுள்ளது! நாம் அவரைப் பார்க்கும்போது அவரைப் போலவே இருப்போம் என்று எனக்குத் தெரியும் (ஒ.பா. 1 யோவான் 3: 2).

V பயனுள்ள ஆதாரங்கள்

*A.* வில்லியம் ஹெண்ட்ரிக்சன், *The Bible On the Life Hereafter*
*B.* மாரிஸ் ராவ்லிங்ஸ், *Beyond Death's Door*

Copyright © 2014 Bible Lessons International

▣ **"மற்றும் அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும்"** இது ஏசா 2: 10,19,21 க்கு ஒரு குறிப்பாக இருக்கலாம். வீழ்ந்த மனிதகுலம் இஸ்ரவேலின் பரிசுத்தரின் மகிமையுள்ள பிரசன்னத்தை விட்டு வெளியேறும். படைப்பின் அவளை நிலை என்னவென்றால், மனித குலத்தின் மிகப் பெரிய தேவை தேவனுடனான ஐக்கியம் தான், ஆனால் பாவம் மற்றும் முரட்டாட்டம் காரணமாக, நாம் அவருக்குப் பயந்து, மகிமையுள்ள ஐக்கியத்திற்காக தன்னைப் போலவே நம்மைப் படைத்தவரிடமிருந்து தப்பி ஓடுகிறோம்.

பழைய ஏற்பாட்டில் "மகிமை" (kabod, BDB 458) என்பதற்கான மிகவும் பொதுவான எபிரேய சொல் ஆரம்பத்தில் ஒரு வணிகச் சொல்லாகும் (இது ஒரு ஜோடி தராசைக் குறிக்கிறது) அதாவது "கனமாக இருக்க வேண்டும்" எனும் அர்த்தத்தைக் கொண்டுள்ளது. அதாவது கனமானவை மதிப்புமிக்கவை அல்லது உள்ளார்ந்த மதிப்புடையவை எனலாம். தேவனின் மாட்சிமையை வெளிப்படுத்த பெரும்பாலும் பிரகாசத்தின் எண்ணக்கரு இந்த வார்த்தையில் சேர்க்கப்பட்டது (ஒ.பா. யாத்திராகமம் 15:16; 24:17; ஏசா. 60: 1-2). அவர் மட்டுமே தகுதியானவர், கனத்திற்குரியவர். வீழ்ந்த மனிதகுலத்திற்கு அவர் மிகவும் மகத்தானவர் (ஒ.பா. யாத்திராகமம் 33: 17-23; ஏசா. 6: 5). தேவனை கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே அறிய முடியும் (ஒ.பா. எரே. 1:14; மத் 17: 2; எபி. 1: 3; யாக்கோபு 2: 1).

"மகிமை" என்ற சொல் ஓரளவு தெளிவற்றது: (1) இது "தேவனுடைய நீதியுடன்" இணையாக இருக்கலாம்; (2) இது தேவனுடைய "பரிசுத்தத்தன்மை" அல்லது "பரிபூரணத்தை" குறிக்கலாம்; அல்லது (3) இது மனிதகுலம் படைக்கப்பட்ட தேவனுடைய சாயலைக் குறிக்கலாம் (ஒ.பா. ஆதி. 1: 26-27; 5: 1; 9: 6), ஆனால் அது பின்னர் முரட்டாட்டத்தின் மூலம் சிதைக்கப்பட்டது (ஒ.பா. ஆதியாகமம் 3: 1-22). இது YHWH தனது மக்களுடன் இருப்பதைக் காண்பிப்பதற்கு முதன்முதலில் பயன்படுத்துகிறது (ஒ.பா. யாத்திராகமம் 16: 7,10; லேவி 9:23; எண் 14:10). கலா 1: 5 இல் சிறப்பு தலைப்பு: மகிமை (டாக்ஸா) ஐப் பார்க்கவும்.

**1:10**

**NASB, NKJV "தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும்"**
**NRSV "தம்முடைய பரிசுத்தவான்களால் மகிமைப்படத்தக்கவராயும்"**
**TEV "தம்முடைய மக்களிடம் மகிமையை முறையாகப் பெறுவதற்கு"**
**NJB "தம்முடைய பரிசுத்தவான்களிடையே மகிமைப்படுத்தப்பட வேண்டும்"**

இந்த சொற்றொடரை குறைந்தது இரண்டு வழிகளில் புரிந்து கொள்ள முடியும்.

1. ஒரு எபிரேய மரபுத்தொடரைப் பிரதிபலிக்கும், இயேசுவின் இரண்டாவது வருகையின் மகத்துவமானது இயேசுவைப் பின்பற்றுபவர்களிடமிருந்து மகிமையைப் பெற வைக்கும்
2. கிரேக்க முன்னிடைச்சொல்லின் இயல்பான பொருளைப் பிரதிபலித்தல், மேலும் முன்னிடைச்சொல் பெயர்ச்சொல்லுடன் மீண்டும் வரும் அசாதாரண கலவைக்கு, (2 தெச. 1: 10,12) அதாவது இயேசு விசுவாசிகளிடையே அல்லது மகிமைப்படுத்தப்படுவார் எனப்படுகிறது.

"பரிசுத்தவான்கள்" என்ற சொல் பிலி 4: 21-ல் ஒரு முறை தவிர எப்போதும் பன்மையாக குறிப்பிடப்படுகின்றது, அங்கே கூட அது ஐக்கியமாகும். இரட்சிக்கப்படுவது நம்மை கிறிஸ்துவின் சரீரத்திலிலும் அவருடைய குடும்பத்திலும் இடம்பெறச்செய்கிறது. சிறப்பு தலைப்பு: பரிசுத்தவான்கள் 1 தெச 3:13 இல் காண்க.

இது ஒரு நிலைப்பாட்டைப் போன்ற ஒரு அனுபவம் அல்ல.
நமது அன்றாட வாழ்க்கையில் நமது நிலைப்பாடு மிகவும் உண்மையானதாகி வருகிறது என்று நம்புகிறோம். அவர் திரும்பி வரும்போது நம்முடைய மகிமை உடனடியாகயாக மற்றும் முழுமையானதாக இருக்கும் (ஒ.பா. 1 யோவான் 3: 2; ரோமர் 8:30). இயேசு தம்முடைய தேவபக்தியுள்ளவர்களின் தெய்வீக வாழ்க்கையில் மகிமைப்படுகிறார் (ஒ.பா. 2 தெச. 1:12; 1 தெச. 2:12; யோவான் 17: 9-10).

▣ **"அந்நாளிலே"** இந்த உறுதியான சொற்றொடர் ஆசீர்வாதத்திற்காக (விசுவாசிகள்) அல்லது நியாயதீர்ப்புக்காக (அவிசுவாசிகளுக்கு) தேவன் தம்முடைய படைப்புக்குத் திரும்பும் காலத்தின் பழைய ஏற்பாட்டு உருவகமாகும். 1 தெச. 5: 2 முழு குறிப்பைக் காண்க. .

**NASB "மற்றும் விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும்"**
**NKJV "மற்றும் விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் இரசிக்கப்படத்தக்கவராயும்"**
**NRSV "மற்றும் ஆச்சரியப்படத்தக்கவராயும் ... விசுவாசிக்கிற அனைவருக்கும்"**
**TEV "மற்றும் விசுவாசம் கொண்ட அனைவரிடமிருந்தும் கனம் "**
**NJB "அவரை விசுவாசிக்கிற அனைவராலும் அவருடைய மகிமையில் காணப்படுகிறார்"**

2 தெச 1:10 இல் இரண்டு தெளிவற்ற சொற்றொடர்கள் உள்ளன. அவை பின்வருமாறு பொருள் படலாம் (1) பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடன் மகிமைப்படுகிறார்கள், இது அவர்களை ஆச்சரியப்படுத்துகிறது, அல்லது (2) விசுவாசிகளுக்காக தேவன் என்ன செய்கிறார் என்று தேவதூதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள் (ஒ.பா. எபே 2: 7; 3:10; 1 கொரி. 4: 9).

▣ **"நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே"** விசுவாசிகளின் பதில் 2 தெச 1: 8-ல் புறமதத்தினருக்கு நேர்மாறாக இருந்தது. அவர்கள் ஒரு செய்தியாகவும் ஒரு நபராகவும் நற்செய்தியைப் பெற்றிருந்தார்கள் (உதாரணமாக, யோவான் 1:12; 3: 16,36; 6:40; 11: 25-26; ரோமர் 10: 9-13).

**1:11 "நாங்கள் உங்களுக்காக எப்போதும் வேண்டிக்கொள்ளுகிறோம்"** இந்த சபைகளுக்காக பவுல் தொடர்ந்து ஜெபம் செய்தார் (ஒ.பா. 2 தெச. 1: 3; 2:12; 1 தெச. 1: 2; 5: 13-18). சிறப்புத் தலைப்பைக் காண்க: இடைவிடாமல் ஜெபித்தல் 1 தெச 1: 2.

**NASB "தேவன் உங்களை அழைப்பதற்கு தகுதியானவர் என்று எண்ணுவார்"**
**NKJV "தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும்"**
**NRSV, NJB "தேவன் உங்களைதமது அழைப்பதற்கு தகுதியானவராக்குவார்"**
**TEV "தேவன் உங்களை வாழ அழைத்த வாழ்க்கைக்கு உங்களை தகுதியானவராக்க"**

தேவன் அதைச் செய்கிறார் (ஓ.பா. பிலி. 1: 6; 2:13; எபே. 4: 4), ஆனால் விசுவாசிகள் அவரை அனுமதி வழங்க வேண்டும், மற்றும் ஆவியுடன் ஒத்துழைக்க வேண்டும் (ஓ.பா. பிலி 2:12; எபே 4: 1). தேவனின் இறையாண்மை மற்றும் மனிதகுலத்தின் சுதந்திர விருப்பத்தின் முரண்பாடு ஒரு ஆரம்ப மற்றும் முற்போக்கான விசுவாசம் பிரதிபலனாக இருக்க வேண்டும். இந்த சூழலில் கிறிஸ்தவரின் புதிய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது (ஓ.பா. எபேசியர் 4: 1; 5: 2,15). நற்செய்தி என்பது ஒரு நபரை வரவேற்று, அந்த நபர் விசுவாசிப்பதற்கான செய்தியை கொடுத்து, அந்த நபர் வாழ்வது போன்ற ஒரு வாழ்க்கையை காண்பித்துக் கொடுப்பதாகும்.

**SPECIAL TOPIC: CALLED**
**சிறப்பு தலைப்பு: அழைப்பு**

விசுவாசிகளை அழைப்பதில், தேர்ந்தெடுப்பதில், கவர்ந்திழுப்பதில் தேவன் எப்போதும் தொடக்க முயற்சியை எடுப்பார் (ஒ.பா. யோவான் 6: 44,65; 15:16; 1 கொரி. 1: 1-2; எபே. 1: 4-5,11). "அழைப்பு" என்ற சொல் பல இறையியல் அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது.

1. பழைய ஏற்பாட்டில் "பெயரை அழைப்பது" எப்போதும் ஒரு ஆராதனையோடு சம்பந்தப்பட்ட சூழலில் இருந்தது (ஒ.பா. ஆதி. 4:26; 12: 8; 21:33; 26:25; யாத்திராகமம் 34: 5; சிறப்புத் தலைப்பைக் காண்க: யாவேயின் "பெயர்").
2. கிறிஸ்துவின் சிலுவையில் முடிக்கப்பட்ட கிரியை மற்றும் ஆவியின் உந்துதல் மற்றும் தேவனின் கிருபையால் பாவிகள் இரட்சிப்புக்கு அழைக்கப்படுகிறார்கள் (ஒ.பா. யோவான் 6: 44,65; 16: 8-10). *klētos* (க்ளோட்டோஸ்) என்ற கிரேக்க சொல் (ஒ.பா. ரோமர் 1: 6-7; 9:24) இறையியல் ரீதியாக இதற்கான இணையான வசனமாகும் 1 கொரி. 1: 1-2 மற்றும் 2 தீமோ. 1: 9; 2 பேதுரு. 1:10.
3. பாவிகள் கர்த்தருடைய நாமத்தை அழைக்கிறார்கள் (சிறப்பு தலைப்பு: கர்த்தருடைய பெயர் மற்றும் சிறப்பு தலைப்பு: யோவானின் "விசுவாசம்," என்ற சொல்லின் பயன்பாடு. # 6) இரட்சிக்கப்படுவதற்கு (உதாரணமாக, *epikaleō* (எபிகாலே), ஒ.பா. அப்போஸ்தலர் 2:21; 22.: 16; ரோமர் 10: 9-13). இப் பதம் ஒரு யூத வழிபாட்டு உவமையாகும் (# 1).
4. விசுவாசிகள் நெருக்கடி மற்றும் மன அழுத்த காலங்களில் அவருடைய பெயரை அழைக்கிறார்கள் (உதாரணமாக, அப்போஸ்தலர் 7:59).
5. விசுவாசிகள் கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கையை வாழ அழைக்கப்படுகிறார்கள் (உதாரணமாக, *klēsis* (கிளாசிஸ்), ஒ.பா. 1 கொரி. 1:26; 7:20; எபே 4: 1; பிலி. 3:14; 2 தெச. 1:11; 2 தீமோ. 1: 9).
6. விசுவாசிகள் ஊழியப் பணிகளுக்கு அழைக்கப்படுகிறார்கள் (ஒ.பா. அப்போஸ்தலர் 13: 2; 1 கொரி. 12: 4-7; எபே 4: 11-12).

சிறப்பு தலைப்பு: தெரிந்தெடுத்தல்
சிறப்பு தலைப்பு: அவர் எங்களை தெரிந்து கொண்டார்

Copyright © 2014 Bible Lessons International

▣ **"மற்றும் தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் நிறைவேற்றவும்"** அவர்களின் புதிய நோக்கங்கள் நிறைவேறும்படி பவுல் ஜெபித்துக் கொண்டிருந்தார் (ஓ.பா. 1 தெச. 1: 3). அவர்களின் புதிய இருதயத்தைப் போலவே (ஓ.பா. எசே. 36: 26-27), அவர்கள் ஒரு புதிய வாய், கைகள் மற்றும் கால்களைப் பெற்றிருக்கிறார்கள் (ஓ.பா. ரோமர் 6: 4; 2 கொரி. 5:17; கொலோ. 3:10).

பவுல் தெசலோனிய கடிதங்களில் "நன்மை" என்ற கருத்தை அடிக்கடி பயன்படுத்துகிறார்:

1.அகதோஸ், *(agathos)* 1 தெச. 3: 6; 2 தெச. 2: 16-17;

a.அகதோன் *(agathon),* 1 தெச. 5:15
b.அகத்தோசுன் *(agathōsunē),* 2 தெச. 1:11
2.கலோன், *(kalon)* 1 தெச. 5:21
3.யூடோக்கியா, *(eudokia)* 2 தெச.1:11

**1:12 "இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும்"**. இங்கே "பெயர்" நபரைக் குறிக்கிறது, அது இணையான கட்டமைப்பிலிருந்து தெளிவாகிறது. கீழே சிறப்பு தலைப்பைக் காண்க.

**SPECIAL TOPIC: THE NAME OF THE Lord (NT)**
**சிறப்பு தலைப்பு: தேவனின் பெயர் (புதிய ஏற்பாடு)**

சபையில் திரித்துவ தேவனின் தனிப்பட்ட சமூகம் மற்றும் வல்லமையான செயல்களைக்குறிக்கும் பொதுவான புதிய ஏற்பாட்டு சொற்றொடராக இது இருந்தது. இது ஒரு மந்திர சூத்திரம் அல்ல, ஆனால் இயேசுவில் காணப்பட்ட தெய்வீக தன்மைக்கான ஒரு வேண்டுகோள் ஆகும்.

பெரும்பாலும் இந்த சொற்றொடர் இயேசுவை ஆண்டவர் என்று குறிப்பிடுகிறது (ஒ.பா. பிலி. 2:11)

1. இயேசுவை விசுவாசிப்பவரின் பணியில் (ஒ.பா. ரோமர் 10: 9-13; அப்போஸ்தலர் 2: 21,38; 8: 12,16; 10:48; 19: 5; 22:16; 1 கொரி. 1: 13.15; யாக்கோபு 2: 7)
2. பேயோட்டுதலில் (ஒ.பா. மத் 7:22; மாற்கு 9:38; லூக்கா 9:49; 10:17; அப்போஸ்தலர் 19:13)
3. குணப்படுத்துதலில் (ஒ.பா. அப்போஸ்தலர் 3: 6,16; 4:10; 9:34; யாக்கோபு 5:14)
4. ஊழியத்தில் (ஒ.பா. மத் 10:42; 18: 5; லூக்கா 9:48)
5. சபை ஒழுக்கத்தின் போது (ஒ.பா. மத் 18: 15-20)
6. புறஜாதியினருக்கு உபதேசம் செய்யும் போது (ஒ.பா. லூக்கா 24:47; அப்போஸ்தலர் 9:15; 15:17; ரோமர் 1: 5)
7. 7.ஜெபத்தில் (ஒ.பா. யோவான் 14: 13-14; 15: 7,16; 16:23; 1 கொரி. 1: 2)
8. கிறிஸ்தவத்தைக் குறிக்கும் ஒரு வழி (ஒ.பா. அப்போஸ்தலர் 26: 9; 1 கொரி. 1:10; 2 தீமோ. 2:19; யாக்கோபு 2: 7; 1 பேதுரு 4:14)

நற்செய்தி அறிவிப்பவர்களாக, ஊழியர்கர்களாக, உதவியாளர்களாக, குணப்படுத்துபவர்களாக, பேயோட்டுகிறவர்களாக நாம் என்ன செய்தாலும், அவருடைய குணத்திலும், அவருடைய வல்லமையிலும், அவருடைய ஏற்பாடுகளிலும் - அவருடைய பெயரிலும் (உதாரணமாக, பிலி. 2: 9-10) செய்கிறோம்!

Copyright © 2014 Bible Lessons International

▣ **"உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும்"** இயேசு விசுவாசிகளில் மகிமைப்படுகிறார், விசுவாசிகள் அவரிடத்தில் மகிமைப்படுகிறார்கள்.

▣ **"நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே "** பிதாவையும் குமாரனையும் பவுல் உறுதியாக இணைப்பது தெசலோனிக்கேய கடிதங்களில் பொதுவானது (ஓ.பா. 1 தெச. 1: 1,3; 3: 11,13; 5: 18,23; 2 தெச. 1: 1,2; 2:12; 2: 13,16; 3: 5)

இந்த சொற்றொடர் கிறிஸ்துவை மட்டுமே குறிக்கிறது. அப்படியானால், அது இயேசுவின் தெய்வீகத் தன்மையை உறுதிப்படுத்தும் பிற புதிய ஏற்பாட்டு நூல்களுடன் பொருந்தும் (அதாவது, யோவான் 1: 1; 8: 57-58; 20:28; ரோமர் 9: 5; பிலி. 2: 6; தீத்து 2: 6. 13; எபி. 1: 8; 1 யோவான் 5:20; 2 பேதுரு 1: 1,11).

**கலந்துரையாடல் கேள்விகள்**

இது ஒரு ஆய்வு வழிகாட்டி வர்ணனையாகும், அதாவது வேதகமத்தைப் பற்றிய உங்கள் சொந்த விளக்கத்திற்கு நீங்களே பொறுப்பு. நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருக்கும் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். நீங்கள், வேதாகமம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மொழிபெயர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இதை நீங்கள் ஒரு வியாக்கியானவியலாளரிடம் விட்டுவிடக்கூடாது.

புத்தகத்தின் இந்த பகுதியின் முக்கிய பிரச்சினைகள் மூலம் சிந்திக்க உதவும் வகையில் இந்த விவாத கேள்விகள் வழங்கப்படுகின்றன. அவை உறுதியானவை அல்ல, தூண்டக்கூடியவை என்று கருதப்படுகின்றன.

1. 1ம் அதிகாரத்தின் மைய கரு என்ன? 1 தெசலோனிக்கேயர் 1 இலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது?
2. விசுவாசிகளுக்கு துன்பம் ஏன் சாதாரணமானது? (வசனம் 5)
3. தேவன் பழிவாங்கும் நபரா? இல்லையென்றால், 8 வது வசனம் என்னத்தை அர்த்தப்படுத்துகின்றது?
4. நரகம் என்றென்றும் இருக்கிறதா?

Copyright © 2013 Bible Lessons International